
# யானை










# யானை நிலப்பரப்பில் வாழும் மிகப்பெரிய விலங்கு.











# யானை கருப்பு நிறத்தில் இருக்கும்.











# யானையின் காது மிகப் பெரியதாக இருக்கும்.



ஆண் யானைக்கு தந்தம் உண்டு.

யானையின் தோல் மிகவும் தடிப்பாக இருக்கும்.











யானையின் மூக்கும், மேல் உதடும் இணைந்ததே தும்பிக்கை.
யானையின் சிறப்பே அதன் தும்பிக்கை தான்.










யானையின் தும்பிக்கை நீரை அருந்துவதற்கும், தாவர உணவுகளை பறித்து உண்பதற்கும் மற்றும் வாசனையை நுகர்வதற்கும் பயன்படுகிறது. யானை தாவரங்களை மட்டுமே உணவாக உட்கொள்ளும்.











## யானைக்கு நினைவாற்றல் சக்தி அதிகம்.










யானையில் மிகப் பெரியது ஆப்பிரிக்க யானை. அது ஆப்பிரிக்க மற்றும் தெற்காசிய நாட்டில் உள்ள காடுகளில் காணப்படுகிறது.











யானையின் உயரம் மூன்று மீட்டர் ஆகும்.
யானைக் கன்றின் எடை 90 முதல் 115 கிலோ இருக்கும்.
யானையின் வாழ்நாள் 70 ஆண்டுகள் ஆகும்.










## யானை குறித்து தமிழில் அழகிய பழமொழி உள்ளது

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்"









## வினாக்கள்:-

1. யானை எந்த நிறத்தில் இருக்கும்?
2. யானையின் உயரம் மூன்று மீட்டர். (சரி/தவறு)
3. யானையின் காது எப்படி இருக்கும்?
4. யானையின் சிறப்பு எது?
5. எந்த யானைக்கு தந்தம் இருக்கும்?